**Copy of Deposition**

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.164/ 2024

Deposition of Witness of PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலசுப்பிரமணியம் | Caste | : |
| Father/Husband's Name | : ஆரப்ப கவுண்டர் | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 13th March 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள் .

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வெள்ளோடு கனக புரத்தில் வசித்துக் கொண்டு PRS Jewellers என்ற நகை கடை வைத்துள்ளேன். அ.சா. 8 திருஞானசம்பத் என்பவரை எனக்கு தெரியும். 04.01.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது கடையில் நான் இருந்தபோது திருஞானசம்பத் அங்கு வந்து 2 பவுன் எடையுள்ள தங்க சங்கிலியை கொடுத்து அது தனது நணபரின் மனைவியுடையது என்றும், மருத்துவ செலவிற்காக அவசரமாக பணம் தேவைப்படுவதாகவும் தங்க சங்கலியை வைத்துக்கொண்டு பணம் கேட்டதால் நான் அவருக்கு ரூ. 92,000 பணம் கொடுத்தேன். பின்பு 02.02.2024 ம் தேதி போலீசாருடன் திருஞானசம்பத் வந்து தெரியாமல் திருட்டு நகையை வாங்கிவிட்டதாக போலீசார் கூறினார்கள். நகை கடையில் உள்ளவர்கள் முன்னிலையில் அந்த தங்க சங்கலியை போலீசாரிடம் ஒப்படைத்து விட்டேன். போலீ சார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை :**

எனது கடையில் சிசிடிவி கேமரா இருந்தது என்றால் இல்லை. நகை அடமானம் வைக்கும் போது அதற்கென தனியாக பதிவேடு வைத்துள்ளேனா என்றால் இல்லை. எந்த கடையில் அடமானம் வைத்து பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் எனது நண்பர்

சுரேஷ் என்பவரிடம் கொடுத்து பணம் வாங்கி கொடுத்தேன். கடையின் பெயர் எனக்கு தெரியாது. சுரேஷ் என்பவர் யார் என்றால் என்னுடன் தான் இருக்கிறார் அவர் அப்ரைசராக உள்ளார். சுரேஷ் எந்த கடையில் அடமானம் வைத்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். போ லீசார் எனது கடைக்கு வந்த போது நான் சுரேஷிடம் விவரத்தை சொன்னேன் என்றாலும் சுரேஷ் சென்று தங்க நகையை வாங்கி வந்தார் என்றாலும் சரிதான். சுரேஷிடம் கொடுத்து அடமானம் வைத்தற்கு எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். திருஞானசம்பத் என்பவர் கொடுத்த தங்க நகைக்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். திருஞானசம்பத்திடம் பணம் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. ரூ. 92,000 பணம் கொடுத்து யார் நகையை மீட்டார்கள் என்றால் நான் தான் பணம் கொடுத்தேன்.

2. பணம் கொடுத்து நகையை மீட்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. பொதுவாக நகை கடையில் நகை உள்ளே வந்தாலும் வெளியே சென்றாலும் பதிவேட்டில் பதிவு செய்யும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் தங்க சங்கலியை பதிவேட்டில் எழுதவில்லையென்றால் சரிதான். போலீசார் வந்தவுடன் பணம் கொடுத்து தங்க சங்கலியை மீட்க சுமார் ஒரு மணிநேரம் ஆனது என்றால் சரிதான். எனது சங்கத்தில் உள்ள ஆட்கள் எழுதிக் கொடுத்து விட்டு நகையை வாங்கி செல்லுமாறு கூறினார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். திருஞானசம்பத் 04.01.2024 தேதி கொடுத்த செயினின் மாடல் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருஞானசம்பத் வேறு ஏதேனும் நகையை அடமானம் வைத்துள்ளாரா என்றால் அவ்வப்போது மோதிரம், செயின் ஆகியவற்றை அடகு வைப்பார். போலீ சார் என்னிடமும் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் யாரால் தயார் செய்யப்பட்டு என்றால் எனக்கு தெரியாது.

3. நகையை போலீ சார் வாங்கும் போது எடை போட்டு வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு கடையை திறந்தேன் என்றால் காலை 9.00 மணி இருக்கும். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் திருஞானசம்பத் என்னிடம் நகை அடகு வைக்க வரவில்லையென்றாலும், நான் பணம் தரவில்லையென்றாலும் 02.02.2024 ம் தேதி போலீ சாரிடம் நகையை ஒப்படைக்கவில்லையென்றாலும்

சரியல்ல. திருானசம்பத் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீ சார் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன்யென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

sd/xxx(M.Mullai)
District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.

Copy of Deposition
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of criminal procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.164/ 2024

Deposition of Witness of PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : திருஞானசம்பத் | Caste | : |
| Father/Husband's Name | : துரைசாமி | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 13th March 2025.
எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள் .
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அவல் பூந்துறையில் வசித்துக் கொண்டு கார் டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு பற்று எனக்கு எதுவும் தேரியாது. போலீசார் என்னை விசாரிக்க வில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும் அதில் ஜல்லி வாங்கி கொடுக்கும் வகையில் சுரேஷ் என்கிற அறிவழகனை தெரியும் என்று கடந்த 04.01.2024 ம் தேதி சொந்த வேலையாக ஈரோடு வந்து விட்டு திரும்ப செல்லும் போது பன்னீர் செல்வம் பார்க் அருகில் சுரேஷ் என்கிற அறிவழகனை பார்த்தாகவும் அவர் தனது மனைவியின் செயின் என ஒரு செயினை கொடுத்து மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு பணம் கட்ட வேண்டுமெனவும் அந்த செயினை எதாவது ஒரு நகைக்கடையில் விற்று பணம் வாங்கி கொடுக்கும் படி கேட்டதாகவும்,

நான் மேற்படி செயினை ஈரோடு பெரியார் வீதியில் உள்ள PRS என்ற கடையில் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் அந்நகையை காட்டி  நகையை வைத்துக்கொண்டு பணம் கொடுக்குமாறு கேட்டதால் அந்த கடைக்காரார் ரூ 92,000 கொடுத்தார் என்றும் மேற்படி பணத்தை சுரேஷ் என்கிற அறிவழகன் வாங்கி சென்றார் என்றும் 02.02.2024 ம் தேதி போ லீ சார் வந்து என்னை விசாரித்து மேற்படி நகை கொள்ளையடித்த நகை என விபரம் சொன்னதாகவும் அதன் பேரில் PRS நகை கடையை காலை 10.00 மணிக்கு அடையாளம் காட்டியதாகவும் நகை கடையின் உரிமையாளர் பாலசுப்பிரமணியம் தங்க செயினை போலீசாரிடம் ஆஜர் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

sd/xxx(M.Mullai)
District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.